அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண் :172/2016
தேதி.:14/11/2016

**மக்கள் பணிக்கு விரைவில் தனது அயராத உழைப்பை**
**மீண்டும் அர்ப்பணிக்க காத்திருக்கும்**
**முதலமைச்சர் புரட்சி தலைவி அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துகளும்**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை.**

"மக்கள் பிரார்த்தனையால் மறுபிறவி எடுத்துள்ளேன், வெகு விரைவில் வழக்கமான பணிகளில் ஈடுபட காத்திருக்கிறேன்" என்று முதலமைச்சர் கூறியிருப்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி தரும் செய்தியாகும். தமிழக மக்கள், உலகில் மற்ற இடங்களில் உள்ள தமிழர்கள், நண்பர்கள், நல விரும்பிகள் தொடர்ந்து மேற்கொண்ட கடும் பிரார்த்தனைகள், விரதங்கள் அனைத்திற்கும் பலன் கிடைத்திருக்கிறது.

கோடானு கோடி மக்களின் பிரார்த்தனைகள், மாண்புமிகு முதலமைச்சரின் மன உறுதி, தன்னலம் கருதாமல் அவர் மக்கள் பணியில் செய்த தியாக செயல்கள் இவை அனைத்தும், அவரை மீண்டும் நீண்ட நெடிய காலம் பொது சேவை செய்ய உறுதுணையாக இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

அவர் பூரண நலம்பெற அருகில் இருந்து கண்ணுறங்காமல் உதவி புரிந்தவர்கள், நமக்கு நம்பிக்கை ஊட்டிய லண்டனில் இருந்து வந்த மருத்துவர் ரிச்சர்ட் பேல் மற்றும் திறமை வாய்ந்த நமது அப்போலோ மருத்துவ குழு, எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவ குழு, சிங்கப்பூரில் இருந்து வந்த பிசியோ தெரபிஸ்ட் மற்றும் மருத்துவ மனை ஊழியர்கள், மருத்துவமனை அருகிலும் மற்ற இடங்களிலும் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்திய காவல் துறையினர், பொதுமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி கூற கடமை பட்டிருக்கிறேன்.

கூடிய விரைவில், புத்துணர்ச்சியுடன் புது வேகத்துடன் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க பணிகளை மேற்கொண்டு நாடு நலம் பெற முதலமைச்சர் புரட்சி தலைவி அவர்கள் உழைக்க ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்